Sethusamudram Project

* 33 Q.—Thiru N. K. PALANISAMY :
Thiru K. SUPPU : } Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal to address the Centre to take up execution of the Sethusamudram Project?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : சேதுசமுத்திரத் திட்டத்தின் முழு வடிவையும் கொண்ட இறுதி அறிக்கை 'ஃபைனல் ப்ராஜக்ட் ரிப்போர்ட்' 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசினிடம் கொடுக்கப்பட்டது. அது அன்றிலிருந்து இன்றுவரை மத்திய அரசின் ஆய்வில் இருந்து வருகிறது. இத்திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு இவ்வரசு ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளது. மத்திய அரசின் கப்பல் துறை மந்திரியை சென்ற மாதம் 16—5—1971-ல் தமிழக அரசின் அமைச்சர்கள் நேரில் சந்தித்து இத்திட்டத்தை விரைவில் எடுத்து முடிக்கும்படி வற்புறுத்தினர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சேதுசமுத்திரத் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே முதலியார் கமிட்டி ரிப்போர்ட் இருக்கிறது. அதனுடைய ஒரு பகுதிதான் தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்துவது. இன்னொரு பகுதியான இந்த சேதுசமுத்திரத் திட்டத்தை இந்த ஆண்டிலாவது தொடங்குவதற்காக அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நான் முதலிலேயே சொன்னபடி ஏற்கெனவே இந்தத் திட்டத்தின் பலவகையான பகுதிகள் ஆராயப்பட்டன. இந்த சேதுசமுத்திரக் கால்வாயை மண்டபத்தின் பக்கத்தில் வெட்டலாமா அல்லது ராமேஸ்வரத்தின் பக்கத்தில் வெட்டலாமா, அதற்கு எவ்வளவு செலவாகும், இதற்கு எவ்வளவு செலவாகும் என்பதெல்லாம் ஆராயப்பட்டு இறுதி வடிவத்தைக் கொண்ட ஃபைனல் ப்ராஜக்ட் ரிப்போர்ட் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் தேதி மத்திய அரசிடம் கொடுக்கப் பட்டது. அது பலமுறை இந்த அரசினல் வலியுறுத்தப்பட்டு வந்திருக்கிறது. சென்ற மாதம் இந்த அரசின் இரண்டு அமைச்சர் கள் நேரில் மத்திய அரசின் கப்பல் துறை மந்திரி ராஜ் பகதூர் அவர்களைச் சந்தித்து மீண்டும், வற்புறுத்தினர்கள். மத்திய அரசின் மந்திரியான, கப்பல் துறை மந்திரி திரு. ராஜ் பகதூர் அவர்கள் இந்த சேதுசமுத்திரத் திட்டத்தை அவர்கள் பெற்ற பிள்ளையாகக் கருதுவதாகவும் இது நிறைவேறுமானல் அதில் அவர்கள் மிக்க மகிழ்ச்சியுடையவர்களாக இருப்பார்கள் என்றும், இது நிறை வேறுவதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாகவும், அவர்களுக்கு வேண்டியதெல்லாம் மத்திய அரசின் திட்டக் குழு இதற்குப் பச்சை விளக்கு காட்டவேண்டுமென்றும் அப்படிக் காட்டுவதானல் உடனடி யாகத் தொடங்க முடியும் என்றும் தெரிவித்தார்கள்.

1971 ஜூன் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போது மத்திய திட்டக் குழுவின் தலைவராகத் தமிழ்நாட்டுப் பிரதிநிதி இருப்பதாலே அவர்கள் மூலமாக சீக்கிரம் பச்சை விளக்கு வாங்குவதற்கு மீண்டும் அமைச்சர் டெல்லிக்குப் போவாரா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மீண்டும் அமைச்சர் டெல்லிக்குப் போவாரா என்று கேட்டால், முன்னால் ஒரு முறை போனதாகக் கருதுகிறார்களா? அவர்கள் முன்னால் கேட்டது போல் காவடி எடுப்பதற்கா? அப்படி எடுக்கவில்லை. முன்னால் கூட மத்திய அமைச்சர் இங்கு வந்திருந்த நேரத்தில்தான் பேசினோம். அவர் சொன்ன கருத்து, இதற்குத் திட்டக் குழு பச்சை விளக்கு காட்டவேண்டும் என்பது. திரு. ராஜ் பகதூர் அவர்கள் கப்பல் துறை அமைச்சராக இருந்தபோது இந்தத் திட்டம் உருவானது. ஆகவே, அவர் இந்தத் திட்டத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர். திட்டக் குழுவின் சம்மதம் பெற்றுத் தான், பின் அமைச்சரின் சம்மதம் பெறவேண்டும். இதைத் தமிழக முதலமைச்சர் அவர்கள் கவனித்துக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எதற்கெடுத்தாலும் அமைச்சர் டெல்லிக்குப் போவாரா என்று கேட்கிறார்கள். சமீபத்தில் ஒட்டப்பட்டிருக்கிற வால்போஸ்டரைப் பார்த்த ஞாபகத்தில் 'டெல்லிக்குப் போறோம் வாரியளா' என்று கேட்கிறார் களா என்று தெரியவில்லை. எதற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போவது என்பதை நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோதே வெறுத்தவர்கள். எதற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போகும் நிலைமை காமராஜருக்கு மட்டுமல்ல, இப்போது இருக்கும் முன்னேற்றக் கழக அரசுக்குக்கூட இருக்கக்கூடாது. டெல்லிக்குப் போகிற நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் அப்படிக் கேட்கப்பட்டதே தவிர, யார் எடுத்தாலும் அது காவடிதான். அது காமராஜர் எடுத்தாலும் காவடிதான், கருணாநிதி எடுத்தாலும் காவடிதான். ஆகவே, அந்த நிலைமை ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டுமென்பதற்காகத்தான் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று எடுத்துக் கூறுகிறோம். ஆகவே, அம்மையார் அதைக் கேலியாகக் கேட் டாலும், அந்தக் கேலி அனைவரின் உள்ளத்தில் உணர்ச்சியை உண்டாக்கி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படவேண்டும். உணர்ச்சி ஏற்படுபவர்களுக்கு நிச்சயம் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடிந்து விட்டபடியால், இன்னும் 5 நிமிட நேரம் நீடிக்க அவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தையும், சேதுசமுத்திரத் திட்டத்தையும் உடனடியாக உருவாக்க வேண்டுமென்று மறுமுறையும் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தூத்துக்குடி துறை முகத் திட்டம் அடுத்த வருஷம் முடிந்துவிடும். இந்த வருஷம் அதற்காக 5½ கோடி ரூபாய் மத்திய அரசு ஒதுக்கியிருப்பதாகத் தெரிவித்து இருக்கிறது. தூத்துக்குடி திட்டத்தையும், சேது சமுத்திரத் திட்டத்தையும், இரண்டையும் தனியாகப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 34 மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

'Standee' buses in City

* 35 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether the 'Standee' buses introduced in city routes provide for 25 sitting passengers;

(*b*) whether a certain number of seats and standing accommodation have been reserved for women;

(*c*) whether these have been introduced only on a few routes; and

(*d*) if so, whether there is any proposal to introduce such buses in all city routes?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) முதல் (ஈ) வரை ஆம்.

DR. H. V. HANDE : Are the Government aware of the fact that because more than 25 persons had to stand in the bus and a great amount of inconvenience takes place and because of these large number of people of standees the springs of the buses and other parts get spoiled? Will the Government see to it that buses are built to withstand this load also? Will the Government think of an alternative method by which these uncomfortable passengers are allowed to sit and travel comfortably?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பஸ் ஸ்டாண்டில் நிற்பதை விட, பஸ்ஸில் நிற்பது மேல் என்று மக்கள் கருதுகிறார்கள். நிற்பது அசௌகரியமாக இருக்கிறது என்று பொதுமக்களிடமிருந்து இதுவரை எந்தவிதமான புகாரும் வந்ததாகத் தெரியவில்லை. அது மட்டுமல்ல, பிரயாணிகள் நிற்பதற்கான அனுமதி பெற்றுத்தான் அந்தப் பேருந்துகள் விடப்படுகின்றன. சமீபத்தில் வேறு ஒரு வகையான பேருந்து ஒன்றை உருவாக்கி, பெண்கள் ஒரு பக்கம், ஆண்கள் ஒரு பக்கம் உட்காரும் வகையிலும், அதிகமான பிரயாணிகள் நடுவில் நிற்பதற்குமான வகையிலும் கட்டப்பட்டு இருக்கிறது. அந்த பஸ்ஸில் 10 பெண்களும், 20 ஆண்களும், ஆக 30 பிரயாணிகள் நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. இந்தப் புது விதமான வண்டி இப்போது நெரிசல் அதிகமான இடங்களுக்குப் பரீட்சார்த்தமான முறையில் விடப்பட்டு இருக்கிறது.